A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.

-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

$4^{th}$ Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 31 / 2024**

திரு T.S.துரை,
த/பெ. செல்வராஜ்,
A4/3, சேலம் மெயின் ரோடு, தியாகதுருகம் நகர்,
கள்ளக்குறிச்சி – 606 402.

………மேல்முறையீட்டாளர்
(திரு T.S.துரை)

எதிர்

செயற்பொறியாளர்/ திருக்கோவிலூர்,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செயற்பொறியாளர் அலுவலக வளாகம்,
மருத்துவமனை சாலை, திருக்கோவிலூர் – 605 757.

. . . எதிர்மனுதாரர்
(திரு T. சாமிநாதன், செயற்பொறியாளர்/ திருக்கோவிலூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 06-05-2024**
**அட்டவணையிடப்பட்ட நாள்: 19-06-2024**

**ஒத்திவைக்கப்பட்ட கேட்புரை நாள் :16-07-2024**

**ஆணை நாள்: 29-07-2024**

06.05.2024 அன்று பெறப்பட்ட திரு T.S.துரை, த/பெ. செல்வராஜ் முதலியார், A4/3, சேலம் மெயின் ரோடு, தியாகதுருகம் நகரம், கள்ளக்குறிச்சி – 606 402 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 31/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 19.06.2024 அன்று அட்டவணையிடப்பட்டு மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கிணங்க 16.07.2024 அன்று விசாரணை நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையின் மூலம் பெறப்பட்ட வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும்

கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது மின் இணைப்பு எண்.523–014–496–இல் போடப்பட்டுள்ள மின் கட்டணம் ரூ.48,323/–ஐ ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது மின் இணைப்பு எண்.523–014–496–இல் போடப்பட்டுள்ள மின் கட்டணம் ரூ.48,323/–ஐ ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளர் 07/2019 முதல் இன்று வரை மின் உபயோகப்படுத்தியது உறுதிசெய்யப்பட்டதாலும், மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த காலங்களில் உபயோகப்படுத்திய மின் நுகர்வுகளை வைத்தும், MRT அறிக்கையில் பெற்ற அறிக்கையினை வைத்தும் சராசரியின் அடிப்படையில் மறு கணக்கீடு செய்யப்பட்டதால் அத்தொகையை செலுத்துமாறு மேல்முறையீட்டாளருக்கு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 31.10.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம் 30.12.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.12.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*இருதரப்பு சாட்சிகளையும், ஆவணங்களையும் பார்வையிட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் திருக்கோவிலூர் கோட்டம், தியாகதுருகம் உட்பிரிவுக்குட்பட்ட T.S. துரை, த/பெ.செல்வராஜ், தியாகதுருகம் அவர்களுக்கு சொந்தமான மணிலா உடைக்கும் மில்ஆலையின் TF III B மின் இணைப்பு எண்.523-014-496, தற்போது மின்பளு 0.30 Kw ஆகும். கடந்த சில ஆண்டுகளாக ஆலையானது இயங்காமல், Lighting load-வுடன் minimum amount செலுத்தியுள்ளார். மேலும் மின் கட்டண கணக்கீடு செய்த காலங்களில் மின் ஆலை உபயோகமற்ற நிலையில் அடிக்கடி பூட்டி வைக்கப்பட்டுள்ளது. இதனால் மின்கணக்கீட்டாளர் அந்தந்த மாதங்களில் முறையாக கணக்கீடு செய்யாமல் Table reading ஆகவும் தன்னிச்சையாக மின் கட்டண கணக்கீடு செய்து வந்துள்ளார். இதன் காரணமாக நுகர்வோர் கடைசியாக பயன்படுத்திய 07/2019 மாதத்திற்கு உண்டான Reading ஆன 8910 unit-யை தொடர்சியாக 01/2023 வரை கணக்கீட்டுள்ளார். பிறகு நுகர்வோர் கேட்டதற்கு இணங்க அனுமதிக்கப்பட்ட மின்பளு 41 Kw லிருந்து 3 Kw வாக குறைக்கும் போது குறைவாக மாற்றப்படும்போது 01.03.2023 அன்று குறிக்கப்பட்ட (Check reading) 14226 ஆகும். அதன்படி கணக்கீடு செய்யப்பட்ட யூனிட் 5220 ஆகும். அதற்குண்டான பயனீட்டு கட்டணம் ரூ.48,323/-.*

*மேலும் மேற்படி மின்அளவி MRT ல் Download செய்து பெறப்பட்ட அறிக்கையின் படி மின்அளவி நல்ல நிலையில் உள்ளது என்பது தெளிவாகிறது. எனவே மனுதாரர் பயன்படுத்திய பயனீட்டுக்குண்டான தொகைதான் ரூ.48323/- என தெளிவாகிறது. அந்த மின் இணைப்பை கணக்கீடு சரியாக முறையாக கணக்கீட்டாளர் செய்யவில்லை. மேற்படி கணக்கீட்டாளரும் இதே போல் தவறுகள் பணியில் செய்ததால் வாரிய விதிகளின்படி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.*

*முடிவாக, மேற்படி மின் இணைப்பில் 02-523-014-496 ல் பதிவான மின் அளவீடும், பயன்பாட்டு தொகையான ரூ.48,323/- யை மனுதாரர் செலுத்தப்பட வேண்டும் என்றும் மனுதாரர் விருப்பப்பட்டால் மேற்படி தொகையை 10 தவணைகளில் செலுத்தலாம் எனவும், எதிர்வாதி செயற்பொறியாளர்/ திருக்கோவிலூர் அவர்கள் சம்பந்தப்பட்ட கணக்கீட்டாளர்கள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரத்தினை இம்மன்றத்திற்கு 15 நாட்களுக்குள் தெரிவிக்கும்படி இம்மன்றம் தீர்ப்பளிக்கிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 19.06.2024 அன்று விசாரணை அட்டவணையிடப்பட்டது.

பின்னர் மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கிணங்க விசாரணை 16.07.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு T.S.துரை கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு T. சாமிநாதன், செயற்பொறியாளர்/ திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் மின்கோட்டம், தியாகதுருகம் நகரத்தில் தனக்கு சொந்தமான இடத்தில் மணிலா உடைக்கும் மில் கட்டி மின் இணைப்பு எண்.523-014-496 பெற்று பல ஆண்டுகாலமாக தொழில் செய்து வந்ததாகவும், தனது மணிலா தொழில் நலிவடைந்த காரணத்தால் மணிலா மில்லை இயக்கமுடியாமல் பல ஆண்டு காலமாக நிறுத்தி விட்டதாகவும், இந்நிலையில் தனது மில்லுக்கு மின் இணைப்பு எண்.496 எண்ணுக்கு மின் பயன் எதுவுமில்லாமல் நிறுத்தி வைத்து இருந்ததற்கு ரூ.48,323/-ஐ செலுத்த வேண்டும் என்று தனக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும், இதனை அடுத்து மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் புகார் அளித்ததாவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேல்முறையீட்டாளர் மேற்படி மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் தனது தரப்பில் உள்ள நியாயங்களை கருத்தில் கொள்ளாமல் மின்சார வாரியத்திற்கு ஆதரவாக உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், எனவே கள்ளக்குறிச்சி மின்நுகர்வோர் குறைதீர்மன்ற உத்தரவை ரத்து செய்து தனக்கு அதிகப்படியாக தவறாக, மோசடியாக விதிக்கப்பட்ட மின் கட்டணம் ரூ.48,323/–ஐ ரத்து செய்ய கேட்டுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

5.3 மேல்முறையீட்டாளர் தனது மணிலா உடைக்கும் மில்லிற்கு மில் இயக்காமல் தொடர் மின்கட்டணத்தை செலுத்தி வந்ததாகவும், தனது மில்லில் பெரும் பொருளாதார நஷ்டத்தின் காரணமாக பல ஆண்டுகளுக்கு முன்பே தனது மணிலா உடைப்பு மில்லில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கழற்றி விற்றுவிட்டதாகவும், மேலும் 2022ஆம் ஆண்டு மின் குதிரை திறனை குறைத்து மின் விளக்கு பயன்பாட்டிற்கு மட்டும் 3 கிலோவாட்டாக குறைக்கும்படி அப்போது பணியில் இருந்து உதவி மின்பொறியாளரிடம் கடிதம் அளித்ததாகவும், அப்போது உதவி மின்பொறியாளர் தனது மில்லை ஆய்வு செய்ததாகவும், தனது மின் மீட்டரை கழற்றி சென்றுவிட்டு புதிய மின்மோட்டரை பொருத்துகிறோம் என்று கூறி எடுத்துசென்றதாகவும், ஆனால் ஒருமாதம் கழித்துதான் மின் மீட்டர் பொருத்தினார்கள் என்றும் ஒரு மாத காலம் மின்மீட்டர் தனது மில்லில் இல்லை என்றும் மேற்படி உதவி மின்பொறியாளர் மீது கள்ளக்குறிச்சி மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அது சம்பந்தமாக தன்னிடம் எவ்வித விசாரணையும் செய்யவில்லை எனவும் வேண்டுமென்றே உதவி மின்பொறியாளருக்கு சாதகமாக செயல்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.4 மேல்முறையீட்டாளர் தியாகதுருகம் அலுவலகத்திற்கு 03.02.2023 மின் கட்டணம் ரூ.9,268/– வந்துள்ளதை தனது மில்லில் எவ்வித மின்பயன்பாடும் இல்லாமல் அதிக கட்டணமாக வந்துள்ளது தன்னால் கட்ட இயலவில்லை என முறையிட்டதாகவும், அதற்கு இப்பொழுது கட்டிவிடுங்கள் இனிமேல் வராது நான் பார்த்து கொள்கிறேன் என்று உத்தரவாதம் அளித்ததுடன் 3 கிலோவாட்டாக குறைத்து விடுகிறேன் என்று கூறினார் என்றும் ஆனால் மேற்படி மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் உதவி மின்பொறியாளர் மீது எவ்விதமான விசாரணையும் செய்யவில்லை என்றும் மன்றம் ஒருதலைபட்சமாக விசாரணை செய்ததாகவும், மேற்படி உதவி பொறியாளரை

விசாரணைக்கு அழைக்கவில்லை என்றும் அவர் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அதன்பிறகு ரூ.48,323/– பில் கட்ட வேண்டும் என்று தெரிவித்ததாகவும், மின்சார பயன்பாடு இல்லாத மில்லுக்கு ஏன் இவ்வளவு கட்டணம் வந்துள்ளது என்று கேட்டதற்கு 18.05.2023 அன்று மின்வாரிய ஊழியர் மின் இணைப்பில் உள்ள மின்மீட்டரை கழற்றி எடுத்து சென்றுவிட்டதாகவும், மேற்படி புகாரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் விசாரிக்கவில்லை என்றும் மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மேற்படி புகாரை கவனத்தில் கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5.5 மேல்முறையீட்டாளர் மின்சார வாரிய தியாகதுருகம் கணக்கீட்டாளர்கள் இருவரும் டோர்லாக் ஆன ஆலைக்கு டேபிள் ரீடிங் ஆகவும், தன்னிச்சையாக மின்கட்டண கணக்கீடு செய்து வந்துள்ளனர் என்று உதவி செயற்பொறியாளர் மன்ற விசாரணையில் தெரிவித்ததாகவும், வாரிய விதிமுறைகளின்படி ஒருமாதம் டோர்லாக் ஆகி இருந்தால் அடுத்த மாதம் சம்பந்தப்பட்ட மின்நுகர்வோருக்கு எழுத்து பூர்வமான நோட்டீஸ் அளிக்க வேண்டும் என்றும் ஆனால் அவ்வாறு தனக்கு அளிக்கவில்லை என்றும் மேலும் டேபிள் ரீடிங் செய்துள்ளதாக தெரிவித்துள்ளது தவறானதாகவும், மேற்படி டேபிள் ரீடிங், டோர்லாக் என்று உள்ளதை defect ரீடிங் நோட்டில் மின்கணக்கீட்டாளர் பதிவை ஏன் மின்சாரவாரிய அலுவலர்கள் கவனிக்கவில்லை என்றும் அதன்மீது கள்ளக்குறிச்சி மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் மேற்படி தவறினை ஏ.இ., ஏ.டி., சரிபார்க்காமல் கணக்கீட்டாளருக்கு உடந்தையாக உள்ளனர் என்றும் மேற்படி நபர்களிடமிருந்து தனக்கு ஏற்பட்ட சேவை குறைபாட்டிற்கு மேற்படி நபர்களிடமிருந்து கட்டணத்தை வசூலிக்க வேண்டியதாகவும், ஆனால் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் இதனை கவனத்தில் கொள்ளாமல் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.6 மேல்முறையீட்டாளர் கள்ளக்குறிச்சி மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் வேண்டுமென்றே தங்கள் துறையின் அதிகாரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தவறான உத்தரவை பிறப்பித்துள்ளதாகவும், தியாகதுருகம் மின்சாரவாரிய அதிகாரிகள் அனைவரும் கூட்டு சேர்ந்துக்கொண்டு தனக்கு அநீதி இழைத்துள்ளனர் என்றும் இதனால் தனது மில்லை இயக்கமுடியாமல் மிகுந்த மனஉலைச்சலிலும், மனவேதனையிலும் உள்ளதாகவும், உதவி மின்பொறியாளர், உதவி செயற்பொறியாளர்

மற்றும் கணக்கீட்டாளர், எ.ஒ. உள்ளிட்ட பலர் தவறு செய்துள்ளதாகவும், மேற்படி அவர்களின் தவறுகளை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் பல மாதங்கள் 0 யூனிட், டேபிள் ரீடிங் என்று கூறுவது நியாயமல்ல, வேண்டுமென்றே அதிகாரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும், எனவே கள்ளக்குறிச்சி மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மன்ற மனு எண்.25/2023-24 நாள்:31.10.2023-ன் உத்தரவை ரத்து செய்து தான் கட்ட வேண்டியதாக தெரிவிக்கும் பணத்தை ரத்து செய்யுமாறும், தவறு செய்த அனைத்து அதிகாரிகளையும் பணிநீக்கம் செய்யுமாறும், நஷ்டஈட்டுத் தொகையை பெற்றுத்தருமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 **<u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மின் நுகர்வோர் 42 கிலோ வாட்டிலிருந்து 3 கிலோ வாட்டாக கடந்த 14.03.2023-ல் (Application No 5236323356) Online மூலம் பதிவு செய்துள்ளதாகவும், அதன் மீது பிரிவு அலுவலர் கள ஆய்வு மேற்கொண்டு 21.03.2023-ல் மின் பளுவினை குறைத்து கொடுத்துள்ளதாகவும், இதில் கால தாமத குறைபாடு ஏதும் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 01/2023 மாத மின் கட்டணம் ரூ.9268/- ஆனது 10.09.2022 முதல் வீதப்பட்டி மின் கட்டணம் மாற்றம் செய்யப்பட்டதின் காரணமாக 11/2022 மாத கணக்கீட்டின் போது Door Lock என்பதால் முந்தைய மாத மின் கட்டணமாக ரூ.3332/- (09/2022) மட்டும் மின் கட்டணமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 01/2023 மாத மின் கட்டணத்தின் போது 11/2022 மற்றும் 01/2023-க்கும் சேர்த்து மின் கட்டணம் கணக்கீடு செய்யும் பொழுது 42 KW-க்கு ரூ. 140/- வீதம் கணக்கீடு செய்யப்பட்டதில் 11/2022-க்கு ரூ.6300/-ம் 01/2023-க்கு 6300/-ம் ஆக மொத்தம் ரூ.12600/-ல் 11/2022-ல் செலுத்தப்பட்ட தொகையான ரூ.3332/- போக ரூ.9268/- கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் குறைபாடோ காலதாமதமோ ஆகவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்கண்ட மின் இணைப்பின் மின் கட்டணம் முறையாக கணக்கீடு செய்யாமல் இருந்ததற்காகவும், இன்னும் பல மின் இணைப்புகளில் வாரிய வருவாய் இழப்பு

ஏற்பட்டதை கண்டுபிடித்து மேற்கண்ட பணியாளர்கள் மீது வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் இரண்டாவது முறை Door Lock என பதிவு செய்து இருந்தால் மட்டுமே நுகர்வோருக்கு அறிவிப்பு கடிதம் கொடுக்க வேண்டிய நிலை TANGEDCO விதிகள்படி உருவாகி இருக்கும் ஆனால் கணக்கீட்டாளர் இரண்டாவது முறை ஏதும் குறிப்பிடவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேற்கண்ட மின் நுகர்வோர் தனது மில்லை தொழில் நலிவடைந்த காரணத்தினால் பல ஆண்டுகளாக நிறுத்தி வைத்ததாக கூறியுள்ளதாகவும், கடந்த காலங்களில் அதாவது 2017 மற்றும் 2018–ல் நுகர்வோர் பதிவேட்டில் பதிவான மின் உபயோகங்களை கவனிக்கையில் தேவைக்கு ஏற்றார் போல் மின்சாரத்தை பயன்படுத்தியுள்ளதாகவும், நுகர்வோர் அடிக்கடி தொழில் நடத்த முடியாத காரணத்தினால் அடிக்கடி பூட்டி வைத்திருப்பது உறுதியாகிறது எனவும், அதன் பேரில் கூர்ந்து நோக்கையில் 07/2019–க்கு பின்பு கணக்கீட்டாளர் சரிவர நுகர்வோர் இடத்திற்கு சென்று முறையான கணக்கீடு செய்யாமல் மேஜை கணக்கீடு செய்துள்ளார் என்பது அதனை உறுதி செய்ய MRT அறிக்கையின் மூலம் உறுதியாகின்றதாகவும், மேலும் நுகர்வோரின் கூற்றுப்படி தேவைக்கு ஏற்ப இயந்திரங்களை பயன்படுத்துவதும், பாதுகாப்பு காரணங்களுக்கு மின் விளக்குகள் மட்டும் பயன்படுத்துவதும் உண்மை என்பது MRT அறிக்கையின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மீது கூர்ந்து நோக்கையில் கடந்த 07/2019 முதல் இன்று வரை மின் நுகர்வோர் மின்சாரத்தை பயன்படுத்தியது உண்மை என்பது தெளிவாகிறது எனவும், தவறு செய்த கணக்கீட்டாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் மேல்முறையீட்டாளர் 07/2019 முதல் இன்று வரை மின் உபயோகப்படுத்தியது உண்மை என்பது உறுதி செய்யப்பட்டதாலும், மேற்கண்ட மின் நுகர்வோரின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த காலங்களில் உபயோகப்படுத்திய மின் நுகர்வுகளை வைத்தும், MRT அறிக்கையில் பெற்ற அறிக்கையினை வைத்தும் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மறு கணக்கீடு செய்யப்பட்டதில் 09/2019 முதல் 03/2023 வரை ரூ.1,10,993/ – இல் ஏற்கனவே வசூல் செய்யப்பட்ட

தொகையான ரூ.82,041/- மீதி தொகையான ரூ.28,952/-ஐ செலுத்த கடமைப்பட்டவர் ஆவார் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 **<u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் மின்கோட்டம், தியாகதுருகம் நகரத்தில் தனக்கு சொந்தமான இடத்தில் மணிலா உடைக்கும் மில் கட்டி மின் இணைப்பு எண்.523-014-496 பெற்று பல ஆண்டுகாலமாக தொழில் செய்து வந்ததாகவும், தனது மணிலா தொழில் நலிவடைந்த காரணத்தால் மணிலா மில்லை இயக்கமுடியாமல் பல ஆண்டு காலமாக நிறுத்தி விட்டதாகவும், தனது மணிலா உடைக்கும் மில்லிற்கு மில் இயக்காமல் தொடர் மின்கட்டணத்தை செலுத்தி வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் தனது மில்லில் பெரும் பொருளாதார நஷ்டத்தின் காரணமாக பல ஆண்டுகளுக்கு முன்பே தனது மணிலா உடைப்பு மில்லில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கழற்றி விற்றுவிட்டதாகவும், மேலும் 2022ஆம் ஆண்டு மின் குதிரை திறனை குறைத்து மின் விளக்கு பயன்பாட்டிற்கு மட்டும் 3 கிலோவாட்டாக குறைக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும், இந்நிலையில் தனது மில்லின் மின் இணைப்பு எண்.496-க்கு மின் பயன் எதுவுமில்லாமல் நிறுத்தி வைத்து இருந்ததற்கு ரூ.48,323/-ஐ செலுத்த வேண்டும் என்று தனக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும், எனவே தனக்கு அதிகப்படியாக விதிக்கப்பட்ட மின் கட்டணம் ரூ.48,323/-ஐ ரத்து செய்ய கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் 01/2023 மாத மின் கட்டணம் ரூ.9268/- ஆனது 10.09.2022 முதல் வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டதின் காரணமாக 11/2022 மாத கணக்கீட்டின் போது Door Lock என்பதால் முந்தைய மாத மின் கட்டணமாக ரூ.3332/- (09/2022) மட்டும் மின் கட்டணமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 01/2023 மாத மின் கட்டணத்தின் போது 11/2022 மற்றும் 01/2023-க்கும் சேர்த்து மின் கட்டணம் கணக்கீடு செய்யும் பொழுது 42 KW-க்கு

ரூ. 140/– வீதம் கணக்கீடு செய்யப்பட்டதில் 11/2022–க்கு ரூ.6300/–ம் 01/2023–க்கு 6300/–ம் ஆக மொத்தம் ரூ.12600/–ல் 11/2022–ல் செலுத்தப்பட்ட தொகையான ரூ.3332/– போக ரூ.9268/– கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் குறைபாடோ காலதாமதமோ ஆகவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்கண்ட மின் நுகர்வோர் தனது மில்லை தொழில் நலிவடைந்த காரணத்தினால் பல ஆண்டுகளாக நிறுத்தி வைத்ததாக கூறியுள்ளார். கடந்த காலங்களில் அதாவது 2017 மற்றும் 2018–ல் நுகர்வோர் பதிவேட்டில் பதிவான மின் உபயோகங்களை கவணிக்கையில் தேவைக்கு ஏற்றார் போல் மின்சாரத்தை பயன்படுத்தியுள்ளது உறுதியாகிறது. அதன் பேரில் நுகர்வோர் பேரேட்டை கூர்ந்து நோக்கையில் 07/2019–க்கு பின்பு கணக்கீட்டாளர் சரிவர நுகர்வோர் இடத்திற்கு சென்று முறையான கணக்கீடு செய்யாமல் மேஜை கணக்கீடு செய்துள்ளார் என்பது MRT அறிக்கையின் மூலம் உறுதியாகின்றதாகவும், பாதுகாப்பு காரணங்களுக்கு மின் விளக்குகள் மட்டும் பயன்படுத்துவதும் உண்மை என்பது MRT அறிக்கையின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் MRT அறிக்கையின்படி மேல்முறையீட்டாளர் 07/2019 முதல் இன்று வரை மின் உபயோகப்படுத்தியது உண்மை என்பது உறுதிசெய்யப்பட்டதாலும், மின் நுகர்வோர் 42 கிலோ வாட்டிலிருந்து 3 கிலோ வாட்டாக கடந்த 14.03.2023–ல் (Application No 5236323356) Online மூலம் பதிவு செய்துள்ளதாகவும், அதன் மீது பிரிவு அலுவலர் கள ஆய்வு மேற்கொண்டு 21.03.2023–ல் மின் பளுவினை குறைத்து கொடுத்துள்ளதாகவும், இதில் கால தாமத குறைபாடு ஏதும் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் தனது தொழில் நலிவடைந்த காரணத்தால் மணிலா மில்லை பல ஆண்டு காலமாக இயக்கவில்லை என தெரிவித்த போதும் அதற்குறிய சான்றாவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. மேல்முறையீட்டாளரின் நுகர்வோர் பேரேட்டினை ஆராயும் போது 07/2019–லிருந்து 01/2023 வரை '0' நுகர்வு எனவும், Reading type பத்தியில் 'not in use', 'normal' and 'door lock' என வெவ்வேறு பிரிவுகளில் பதிவாகியுள்ளதும் தெரியவருகிறது. இதற்கு எதிர்மனுதாரர் பதிலளிக்கையில்

மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின் நுகர்வு இருந்ததாகவும், கணக்கெடுப்பு செய்த கணக்கீட்டாளர் முறையாக கணக்கீடு செய்யாமல் Table reading செய்ததாகவும், MRT–இல் மின் அளவியை சோதனை செய்த போது மின்அளவி நல்ல நிலையில் இருப்பதாக அறிக்கை பெறப்பட்டதாகவும் தெரிவித்தார்.

7.8 எதிர்மனுதாரர் தவறுதலாக கணக்கீடு செய்த பணியாளர் மீது வாரிய விதிமுறைகளின்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதி 2004–இன்படி உரிமம்தாரரின் பணியாளர் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மின்குறைதீர்ப்பாளரின் வரம்பிற்குள் இல்லை என்பதால் இது தொடர்பாக தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

7.9 மேல்முறையீட்டாளர் தன்னுடைய பயன்பாட்டில் இல்லாத மணிலா மில்லுக்கு கூடுதல் மின் கட்டணத்தை துண்டறிக்கை மூலம் கேட்டது நியாமில்லை எனவும், ஆகவே அதனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று முறையீடு செய்துள்ளார். எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் மணிலா மில்லுக்கு 07/2019–லிருந்து 01/2023 வரை அந்த காலகட்டத்தில் இருந்த கணக்கீட்டாளர் மின்பயன்பாடு '0' என்று பதிவு செய்ததன் அடிப்படையில் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

7.10 ஆகவே இந்த வாதி பிரதிவாதியின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரிடம் தங்களுடைய மணிலா மில்லை பயன்படுத்தவில்லை என்று உரிமதாரரிடம் எதாவது தகவல் தெரிவித்ததற்கான ஆதார ஆவணங்கள் உள்ளதா என்று வினவிய போது தான் வாய்மொழி மூலம் தெரிவித்ததாகவும் அதற்கான ஆவணங்கள் இல்லை என்றும் தெரிவித்தார்.

7.11 ஆகவே, இந்நிலையில் மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பில் இருந்த மின்அளவியின் நிலை குறித்து அறிய நான் Evidence Act, 1872 section 35 விதியை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *“35. Relevancy of entry in public record or an electronic record made in performance of duty. An entry in any public or other official book, register or record or an electronic record stating*

*a fact in issue or relevant fact and made by a public servant in the discharge of his official duty or by any other person in performance of a duty specially enjoined by law of the country in which such book, register or record or an electronic record is kept is a relevant fact."*

7.12 மேற்கூறிய சான்று சட்டத்தின் படி எந்தவொரு அரசாங்க பதிவும் நாட்டின் சட்டத்தின் கீழ் சாட்சியாகும் என தெரியவருகிறது. உரிமதாரரின் MRT பிரிவுக்கு அறிவியல் சோதனை நடத்திய பிறகு மீட்டரின் நிலையைத் தீர்மானிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, சாட்சியச் சட்டத்தின் விதிகளின்படி பிரதிவாதியால் இணைக்கப்பட்ட MRT சோதனை அறிக்கையை ஆராய விரும்புகிறேன். எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக MRT அறிக்கையின்படி மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் இருந்த மின் அளவி நல்ல நிலையில் இருந்ததும், மின்அளவி தரவிறக்க தகவல்களிலிருந்து அந்த மின் இணைப்பில் மின் நுகர்வு இருந்ததும் உறுதியாகிறது.

7.13 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் load reduction செய்யும் போது 01.03.2023 அன்று மின்னளவியில் பதிவாகியிருந்த அலகுகள் 14226 யூனிட்கள் எனவும், மேலும் அந்த மின்அளவியை MRT மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் அம்மின்னளவி நல்ல நிலையில் இருந்ததாகவும் அதை சோதனை செய்த போது அந்த காலத்தில் அதில் பதிவாகி இருந்த மின்பயன்பாடு அதாவது, 10.03.2023 அன்று 14229 அலகுகள் என அறிக்கையின் மூலம் தெரியவருவதால், விடுப்பட்ட மின்பயன்பாடு கணக்கீட்டு அலகுகள் இருப்பது உறுதியாகிறது. அந்த விடுப்பட்ட அலகுக்கான கட்டணத்தை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது நிரூபணமாகிறது.

7.14 மேலும் தங்களுடைய மின் இணைப்பில் இதே மின்னளவி தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளதா என்று வினவிய போது ஆம் என்றும் ஒப்புக் கொண்டார். ஆகவே இந்நிலையில் எதிர்மனுதாரர் MRT அறிக்கையின் அடிப்படையில் 10.03.2023 அன்று 14229 அலகுகள் உறுதியாக பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்த மொத்த அலகுகளை விடுபட்ட காலங்களுக்கு சராசரியின் அடிப்படையில் கணக்கீடு செய்து கீழ்க்கண்ட அட்டவணையின்படி தனி இணைப்பாக சமர்பித்துள்ளார்.

| REVISED BILL INRESPECT OF SC NO. 523 014 496 TF. IIB THIRU.T.S.DURAI LOAD 42 KW TO 3 KW IN JE/TOWN/ THIYAGADURUGAM SECTION | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| SL.NO. | MONTH | ASPER CMRI | | ASPER CONSUMER LEDGER | | | REVISED BILL AND TO BE COLLECTED | | | | | ALREADY BILLED & COLLECTED | TO BE COLLECTED |
| | | ASPER CMRI | UNITS | KWH READING | UNITS | AMOUNT | KWH READING | UNITS | CC CHARGES + PEAK HOUR CHARGES + E.TAX | FC | TOTAL AMOUNT | | |
| 1 | Jul-19 | | | 8910 | 200 | 4305 | 8910 | 0 | 0 | 0 | 0 | 0 | |
| 2 | Sep-19 | | | 8910 | 0 | 1575 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 3 | Nov-19 | | | 8910 | 0 | 2940 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 4 | Jan-20 | | | 8910 | 0 | 2940 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 5 | Mar-20 | | | 8910 | 0 | 2940 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 6 | May-20 | | | 8910 | 0 | 2940 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 7 | Jul-20 | | | 8910 | 0 | 3087 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 3087 | 1777 |
| 8 | Sep-20 | | | 8910 | 0 | 3087 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 3087 | 1777 |
| 9 | Nov-20 | | | 8910 | 0 | 2940 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 10 | Jan-21 | | | 8910 | 0 | 2940 | 8910 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 11 | Mar-21 | | | 9010 | 100 | 3607 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 3607 | 1257 |
| 12 | May-21 | | | 9010 | 0 | 4305 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 4305 | 559 |
| 13 | Jul-21 | | | 9010 | 0 | 1575 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 1575 | 3289 |
| 14 | Sep-21 | | | 9010 | 0 | 3087 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 3087 | 1777 |
| 15 | Nov-21 | | | 9010 | 0 | 2940 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1924 |
| 16 | Jan-22 | | | 9010 | 0 | 2940 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1924 |
| 17 | Mar-22 | | | 9010 | 0 | 2940 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 18 | May-22 | | | 9010 | 0 | 2940 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 19 | Jul-22 | 14093.04 | | 9010 | 0 | 2940 | 9010 | 288 | 1924 | 2940 | 4864 | 2940 | 1524 |
| 10 | Sep-22 | 14108.35 | 15.31 | 9010 | 0 | 3332 | 9010 | 15 | 118 | 3332 | 3450 | 3332 | 118 |
| 11 | Nov-22 | 14173.85 | 65.5 | 9010 | 0 | 3332 | 9010 | 66 | 132 | 6300 | 6432 | 3332 | 3100 |
| 12 | Jan-23 | 14219.28 | 45.43 | 9010 | 0 | 9268 | 9010 | 46 | 554 | 6300 | 6854 | 9268 | -2414 |
| 13 | Mar-23 | 14229.63 | 10.35 | 14230 | 5220 | 48323 | 14230 | 18 | 90 | 6003 | 6093 | 0 | 6093 |
| 14 | May-23 | 14249.02 | 19.39 | 14230 | 4 | 499 | 14249 | 19 | 162 | 450 | 612 | 0 | 612 |
| 15 | 8-Jun-23 | 14251.73 | 2.71 | 0 | 0 | 0 | 14251 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 16 | 30.04.2024 | Asper Ombusman order 25 % collected | | | | | | | | | | 12081 | -12081 |
| | | | | | | | | | 35688 | 75305 | 110993 | 82041 | 28952 |

5324     05/2014-     5340
19
5321

AYR UNITS CALCULATION FROM 05/2019 TO 07/2022

14230-8910=5320-156-5164

5164/18=288 UNITS

| | |
|---|---|
| TO BE BILLED AMOUNT | 110993 |
| ALREADY BILLED AND COLLECTED | 82041 |
| BALANCE TO BE COLLECTED CC BILL | 28952 |

(Signature) 15/7/24
EXECUTIVE ENGINEER
/ O&M/ THIRUKOILUR

7.15 இந்நிலையில் விடுப்பட்ட மின் அலகுகளை வசூலிப்பது தொடர்பாக தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி 12 –ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“**12. Errors in billing***

*(1) In the event of any clerical errors or mistakes in the amount levied, demanded or charged by the Licensee, the Licensee will have the right to demand an additional amount in case of undercharging and the consumer will have the right to get refund of the excess amount in the case of overcharging.*
*(2) Where it is found that the consumer has been over-charged, the excess amount paid in such cases will be adjusted against future current consumption charges. If, even after such against future current consumption charges for two assessment periods, there is still a balance to be refunded, the refund will be made by cheque.”*

7.16 மேற்கூறிய விதிகளின்படி உரிமதாரர் செலுத்தும்படி சொன்ன, கேட்ட அல்லது விதித்த தொகையில் எழுத்தர் பிழைகளோ, தவறுகளோ இருக்கும்போது குறைவாக கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால் கூடுதல் கட்டணம் விதிக்க உரிமதாரருக்கு உரிமையுண்டு. அதேபோல் அதிகமாக கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால், அதை மீளத் தரும்படி கேட்க நுகர்வோருக்கு உரிமையுண்டு எனவும், நுகர்வோருக்கு கூடுதலாகக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால், அத்தகைய நிகழ்வுகளில், கட்டப்பட்ட கூடுதல் தொகையை எதிர்கால மின்னோட்ட நுகர்வுக் கட்டணங்களில் ஈடுசெய்து தரலாம் எனவும் அறியப்படுகிறது.

7.17 மேற்கூறிய வாதங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின்பயன்பாடு இருந்ததும் அதில் விடுப்பட்ட அலகுகள் இருந்ததும் உறுதிசெய்யப்பட்ட நிலையில் அவ்வாறு விடுப்பட்ட மின் அலகுக்கான கட்டணத்தை வசூலிக்குமாறு தீர்வு செய்த மின்குறைதீர்மன்றத்தின் ஆணையில் மாற்றம் செய்ய தேவையில்லை என முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டிய கட்டணத்திற்கான விரிவான கட்டண அறிக்கையை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி 13(2)–பட்டியல்கள் சார்பு செய்தல் (Servicing of Bills)– இன்படி அறிக்கை அளித்து விடுப்பட்ட அலகுக்கான தொகையை மேல்முறையீட்டாளர் ஏற்கனவே செலுத்திய மேல்முறையீட்டுக்கான 25% தொகையை கழித்து வசூலிக்க உத்திரவிடப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மின்குறைதீர்மன்றத்தின் ஆணையில் மாற்றம் செய்ய தேவையில்லை என முடிவு செய்யப்பட்டதால் உரிய விடுப்பட்ட தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 31/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு T.S.துரை, – By RPAD
த/பெ. செல்வராஜ்,
A4/3, சேலம் மெயின் ரோடு, தியாகதுருகம் நகர்,
கள்ளக்குறிச்சி – 606 402.

2. செயற்பொறியாளர்/ திருக்கோவிலூர்,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செயற்பொறியாளர் அலுவலக வளாகம்,
மருத்துவமனை சாலை, திருக்கோவிலூர் – 605 757.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவாஜி நகர், லயன்ஸ் கிளப் பில்டிங்,
கள்ளக்குறிச்சி – 606 202.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.